(1975 மார்ச் 6

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் ஜாதிப் பெயரைப் போட்டுவிட்டு சர்ட்டிபிகேட்டில் கம்யூனிட்டி பெயர் மட்டும் போட்டால் என்ன ஏற்படும்? நடைமுறையில் இதற்கு ஏதாவது விதி இருக்கின்றதா? மேல் படிப்பு படிக்கின்றபோது உபகாரச் சம்பளம் கொடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அடி மட்டத்திலிருந்து வந்தால்தான், ஓரளவுக்குச் சரியாக வரும். சிலர் இடத்திற்குத் தகுந்தாற்போல் மாறியும் விடுகிறார்கள். உயர் கல்விக்கு வந்த பிறகு கூட சிலர் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறி சலுகைகள் பெற்றிருக்கிறார்கள். அது குறித்து இரண்டு மூன்று வழக்குகள் கூட வந்திருக்கிறது. அவர்களிடமிருந்து திரும்ப வசூல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, ஆரம்பக் கல்வி, உயர் நிலைக்கல்வி ஆகிய கட்டங்களிலேயே இந்தக் குறிப்புகளைச் சரிவரக் கொடுத்துவிட்டால், பிற்காலத்தில் இப்படிச் சங்கடங்கள் இல்லாமலிருக்கலாம்.

Duty Allowance to Headmasters.

*114 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Headmasters of High Schools are not being paid the duty allowance now;

(*b*) if so, whether the Government will renew the payment of the same to them; and

(*c*) whether the Government will consider giving Selection Grade scale of pay to the Headmasters also?

தலைமை ஆசிரியர்களுக்கு அலுவல்படி.

திரு பி. ஆர் தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அலுவல்படி (Duty Allowance) தற்போது வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அரசு, மீண்டும் அவர்களுக்கு அத்தொகையை வழங்குமா?

(உ) தலைமை ஆசிரியர்களுக்கும், தேர்வு நிலைச் சம்பள வீதம் வழங்குவதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) and (உ) தலைமை ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம்தேதி முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அதனால் அவர்களுக்கு தனிச் சம்பளம் வழங்க இடமில்லை. அவர்களுக்கு தேர்வுநிலை ஊதிய விகிதம் ஏற்படுத்தவும் தேவையில்லை.